செய்தி வெளியீடு எண் : 203 நாள் : 31.01.2024

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

**செய்தி வெளியீடு**

6–வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 கடந்த ஜனவரி 19–ம் தேதி பிரம்மாண்டமான தொடக்க விழாவுடன் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தொடங்கியது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று போட்டிகளை தொடங்கி வைத்தார். கடந்த 13 நாட்களாக தமிழ்நாட்டின் 4 மாவட்டங்களில் நடைபெற்று வந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 இன்று (31.01.2024) நிறைவடைந்தது.

சென்னை கலைவாணர் அரங்கத்தில் இன்று (31.01.2024) நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டியின் நிறைவு நாள் விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அனுராக் சிங் தாக்கூர் அவர்கள் முன்னிலையில் ஒட்டுமொத்த தொடரில் முதலிடம் பிடித்த மகாராஷ்டிரா, இரண்டாமிடம் பிடித்த தமிழ்நாடு மற்றும் மூன்றாம் இடம் பிடித்த ஹரியானா ஆகிய மாநிலங்களுக்கு பரிசு கோப்பைகளை வழங்கி ஆற்றிய உரை:

Today we gather here to celebrate the conclusion of the spectacular sporting event, the closing ceremony of Khelo India Youth Games 2023 hosted by our vibrant state of Tamil Nadu.

இந்திய ஒன்றியத்தின் விளையாட்டு துறையின் தலைநகர் என்ற நிலையை அடைவதற்கு தமிழ்நாட்டிற்கு அனைத்து தகுதிகளும் இருக்கிறது என்பதற்கு இந்த போட்டிகள் 2023 மீண்டும் தமிழ்நாடு நிரூபித்திருக்கிறது.

The success of Khelo India Youth Games 2023 reaffirms Tamil Nadu’s commitment to sports and its capability to successfully organise and execute grand events of national and international significance. Over the past 13 days, our state has been proud to host over 5,400 plus talented athletes from across the country showcasing their sporting skills in various disciplines.

இந்த நேரத்தில் முதல் இடம் பிடித்துள்ள மகாராஷ்டிரா, 2வது இடம் பிடித்துள்ள நம்முடைய தமிழ்நாடு மாநிலத்திற்கும், 3வது இடம் பிடித்துள்ள ஹரியானா விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அனைவருக்கும் வாழ்த்துகளை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறேன்.

It is heartening to note that Tamil Nadu sent the largest contingent ever for a host state as it had around 600 athletes participating in this edition of the games.

தமிழ்நாடு விளையாட்டுத்துறையின் வரலாற்றில் எத்தனையோ தேசிய அளவிலான போட்டிகள் நடைபெற்றிருந்தாலும், அதில் பங்கேற்றிருந்தாலும் பதக்கப் பட்டியலில் இந்த முறைதான் தமிழ்நாடு முதல் 3 இடங்களுக்குள் வந்துள்ளது.

This is the first time our Tamil Nadu stands in top three in the medal tally in the history of the Khelo India Youth Games.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக திராவிட மாடல் தமிழ்நாடு அரசு விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்கு எடுத்த நடவடிக்கைகள்தான் இதற்கு ஒரே காரணம்.

The Tamil Nadu CM's trophy, with an astonishing participation of more than 3.71 lakh players, reflects the enthusiasm and passion that our state has for sports at all levels. This tournament is not just a competition, it's a celebration of the spirit of sportsmanship and healthy competition that defines sporting culture.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் ஏழை, எளிய கிராமப்புற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பலரை அடையாளம் காண்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. அந்த திறமையாளர்களை கண்டறிந்து அவர்களுக்கான அந்த பயிற்சியை நம் அரசு கொடுத்தது. அதன் விளைவாகத்தான் தமிழ்நாடு இன்று 2வது இடத்திற்கு வந்திருக்கிறது.

Our government, under the visionary leadership of Honorable Chief Minister, has consistently highlighted the importance of sports in our society. In June 2023, our honourable chief minister extended an invite to Manipur athletes to train in Tamil Nadu. About 15 fencing athletes came for the training in Tamil Nadu. They stayed here for more than a month. The entire boarding and lodging costs were taken care by the Government of Tamil Nadu. We are proud that two of them, Huiningshumbam Bala Chanu and Sanjenbam Bicky, have won the bronze medals for Manipur in this edition of Khelo India Youth Games. The Khelo India Youth Games showcased a diverse array of sports encompassing traditional disciplines such as kalarippayattu, gatka and thang ta, along many emerging ones.

In addition to the organizing these high profile events, we have established the Tamil Nadu Champions foundation, one of its kind initiatives. This foundation serves as an inspiration to our talented athletes, offering financial assistance to those who need it the most. It was with immense pride I announce that athletes sponsored by the Tamil Nadu Champions foundation have secured a total eight medals in the Khelo India Youth Games and five out of the eight medals are gold medals.

My special congratulations to riders Tamilarasi, Danyananda and Pooja Swetha, the beneficiaries of Tamil Nadu Champions foundation, for securing these medals in the Khelo India Youth Games 2023. A total of rupees 37 lakhs was awarded to these players by the Tamil Nadu Champions foundation. We firmly believe that no talent should be hindered for want of money.

Tamil Nadu Champions foundation is our commitment to nurture and support the dreams of our young sports persons. As of now, we come to the close of Khelo India Youth Games. I extend my heartfelt congratulations to all the athletes, coaches, CDMs, CMs, competition managers and support staff for their hard work and dedication. To the medalists and awarded recipients, your dedication, discipline and determination have set you apart as true champions. As you stand on the podium to receive your medals and accolades, remember that you are not just a championship in sports, but

ambassadors of teamwork, determination and the spirit of fair play. Many national records and games records were broken during this event.

Let's take a moment to appreciate the incredible team behind the scenes at the Khelo India. We had a dedicated group of 1331 team officials, 1020 technical officials and 455 sports specific volunteers. With their unwavering commitment, they played a pivotal role in ensuring the smooth functioning of our teams throughout the competition.

We will never forget the 1450 general volunteers who played a vital role in various aspects of the event management. Khelo India Youth Games 2023 will add another feather to the cap of Tamil Nadu's sports history. Again, I would like to express a heartfelt gratitude to the honourable Chief Minister for his continuous support and encouragement.

A special thanks to Thiru Atulya Mishra, ACS, Youth Welfare, Sports Development Department, Government of Tamnadu and Thiru J Meghanatha Reddy, IAS member secretary, Sports Development Authority of Tamilnadu for the tireless efforts in organising and executing this grand event seamlessly. The dedication of all the officers from the Sports Authority of India and Sports Development Authority of Tamil Nadu has been instrumental in ensuring the smooth functioning of the games.

To the beloved athletes, trainers and office parallels of sports associations - your commitment to excellence is truly commendable. You are the driving force behind the success of these games and we are proud to witness your achievements.

I would also like to acknowledge the presence of the beloved students of SDAT hostels whose enthusiasm and spirit have had vibrancy to this sporting extravaganza. A special thanks to the press and media for their extensive coverage helping us share the success stories and achievements of our young athletes with the entire nation. In this grand stage, I would like to make an announcement.

விளையாட்டு என்பதை ஒரு இயக்கமாகவே நம்முடைய தமிழ்நாடு அரசு மாற்றி வருகிறது. அதிலும் குறிப்பாக விளையாட்டு துறையின் சாதனையாளர்கள் நகரத்தில் இருந்து மட்டும் அல்ல கிராமத்தில் இருந்தும் வரவேண்டும். குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த பணக்கார வீட்டு பிள்ளைகள் மட்டும் அல்ல எல்லோரும் வர வேண்டும், விளையாட்டில் வெல்ல வேண்டும் என்பதே திராவிட மாடல் அரசின் எண்ணம். அந்த வகையில் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் (Kalaignar Sports Kit) திட்டத்தை தமிழ்நாட்டில் உள்ள 12,000 கிராம ஊராட்சிகளில் நம்முடைய அரசு துவக்க இருக்கிறது.

திருச்சியில் வரும் 7ம் தேதி இந்த திட்டத்தை நான் துவக்கி வைக்கின்றேன். எப்படி படிப்பதற்கு புத்தகங்களை நமது அரசு கொடுக்கின்றதோ, அதேபோல விளையாட்டு போட்டிகளில் இளைஞர்கள் சாதிக்க வேண்டும் என்று விளையாட்டு உபகரணங்களையும் நாம் கொடுக்க இருக்கின்றோம். அதுவும் விளையாட்டை எப்போதும் நேசித்த கலைஞருடைய நூற்றாண்டில் கலைஞரின் பெயரிலேயே கொடுக்க உள்ளோம்.

வெற்றியாளர்களுக்கு பதக்கமும், விருதுகளும் ஒரு அங்கீகாரம் என்றால் போட்டிகளில் பங்கேற்றவர்களுக்கு இந்த அனுபவம் தான் பதக்கம். எனவே உங்களுக்கும் என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் வெற்றி வாய்ப்பை நழுவவிட்டிருக்கலாம் ஆனால் உங்களுக்கான களம் அப்படியேதான் இருக்கிறது.

உங்கள் திறமைக்கான அங்கீகாரம் வெகுதொலைவில் இல்லை, கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு 2023 சர்வதேச அளவில் சாதிக்க அவர்களுடைய திறமையை மேன்மேலும் வளர்த்தெடுத்து அவர்களை வெற்றியாளர்களாக்கிட இந்த அரசு அயராது உழைக்கும். குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த நம்முடைய வீரர்களுக்கு கழக அரசு என்றும் துணை நிற்கும்.

Let the spirit of sportsmanship continue to shine bright. Thank you all for being a part of this incredible journey. Let the legacy of Khelo India Youth games inspire generations to come. And as the tagline rightly proclaimed, the future is here. அனைவருக்கும் நன்றி.

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

விழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், மத்திய சென்னை நாடளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்,அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.த.வேலு, திரு,இ.பரந்தாமன், திரு.ஜே.ஜே.எபினேசர், திரு.ஜோசப் சாமுவேல், திரு.ஐட்ரீம் இரா.மூர்த்தி, திரு.முத்துராஜா, ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற ஸ்கேட்டிங் வீராங்கனை டாக்டர்.ஆர்த்தி கஸ்தூரி ராவ், ஒன்றிய அரசின் விளையாட்டு செயலாளர் சுஜாதா சதுர்வேதி இ.ஆ.ப அவர்கள், இந்திய விளையாட்டு ஆணையத்தின் தலைமை இயக்குனர் சந்தீப் பிரதான் இ.ஆ.ப அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி இ.ஆ.ப அவர்கள், சென்னை பெருநகர மாநகராட்சியின் துணை மேயர் திரு.எம்.மகேஷ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in